[திரு. சி. கோவிந்தராசன்] [1977 ஆகஸ்டு 2

எடுத்துக் கொள்ளப்படவில்லை. அங்கே போலீஸ் கெடுபிடி அதிகமாக இருக்கிறது, கட்சிப் பாகுபாடு இல்லாமல் சகட்டு மேனிக்கு அடிக்கப்படுவதாக இன்று காலைகூட தகவல் வந்திருக்கிறது. நாளைக்கு எடுத்துக் கொண்டாலும் சரி........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என்று சொன்னேன். ஆனால் நீங்கள் இங்கே அத்தனையையும் சொல்லிவிட்டு எழுப்பியிருக்கிறீர்கள். முதலமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கிறது என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அமருங்கள். அறைக்கு வந்து கேளுங்கள், சொல்கிறேன். எல்லாவற்றையும் இங்கேயே எழுப்பிக் கொண்டிருந்தால் என்னிடத்திலே கொடுக்கவேண்டிய அவசியமே இல்லையே.

(5) கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் புகையிலை உற்பத்தி செய்து விற்க முடியாமல் அவதியுறும் விவசாயிகள் நிலை குறித்து.

*திரு. மா. மீனாட்சி சுந்தரம்: தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ''தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் சுமார் 2 கோடி ரூபாய் புகையிலை உற்பத்தி செய்து விற்க முடியாமல் சுமார் 5 ஆயிரம் விவசாயிகள் அவதிப்படுவதாலும், வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திடம் போதிய பணம் இல்லாததால் கொள்முதல் செய்ய முடியாத நிலையில் மேற்படி சங்கத்திற்கு குடந்தை மத்திய வங்கியிலிருந்து போதிய பணம் கொடுத்து புகையிலை கொள்முதல் செய்வது குறித்து''.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியில் 5,600 புகையிலை பயிரிடுவோர்கள் உள்ளனர். சுமார் 1,800 ஏக்கர் நிலத்தில் 14.40 இலட்சம் கிலோ கிராம் மெல்லும் புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது. வேதாரண்யம் புகையிலை பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை சங்கம் 1973-ல் தொடங்கப்பட்டு 1974-ல் புகை

யிலை வாணிகம் செய்ய ஆரம்பித்தது. 5,600 உற்பத்தியாளர்களில் 307 உற்பத்தியாளர்களே சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். அரசு பங்குத் தொகை ரூ. 25,000 யுடன் 17 கூட்டுறவு கடன் சங்கங்களின் பங்குத் தொகை ரூ. 12,225-ம் உள்பட, இச்சங்கத்தின் மூலதனம் ரூ. 55,800 மட்டும் ஆகும். கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி இச்சங்கத்திற்கு தொடக்கத்திலிருந்தே வாணிகத்திற்கான பணம் கடன் கொடுத்து வருகிறது. இச்சங்கத்திற்கு அதன் சொந்த பண இருப்பின் (owned funds) அளவு வரையில் மட்டும் கடன் கொடுக்குமாறு ரிசர்வ் வங்கி மத்திய கூட்டுறவு வங்கிக்கு அறிவுறுத்தியிருக்கிறது. 23ஆம் ஜூலை மீ 77ஆம் ஆண்டு அன்று கூட இக்கூட்டுறவுச் சங்கத்தின் சொந்தப் பண இருப்பு சுமார் ரூ. 60,000 மட்டுமேயாகும். அதனால் இக்கூட்டுறவு சங்கம் அதன் வாணிகத்திற்கு இத்தொகைக்கு மட்டுமே பணம் கடனாகப் பெற தகுதி பெற்றது. ஆயினும், 1977-ல் ரிசர்வ் வங்கியின் அறிவுரைக்கு மாறாக, இச்சங்கத்திற்கு உதவி செய்வதற்காக மத்திய வங்கி ரூ. 1.50 இலட்சம் கடனாகக் கொடுத்தது. இதற்கு மேலும் சங்கத்திற்குப் பணம் கடன் கொடுத்தால் ரிசர்வ் வங்கியின் அறிவுரைகளை வேண்டுமென்றே கும்பகோணம் மத்திய வங்கி மீறிக் கொண்டு வருவதாகவும் கொள்ளப்படும். இச்சங்கத்தில் புகையிலை உற்பத்தியாளர்கள் இன்னும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களாகச் சேர்ந்து, அதன் மூலதனத்தை அதிகரித்தால்தான் அதனுடைய கடன் பெறும் தகுதி அதிகமாகி வாணிபமும் மேம்படும். புகையிலை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களானால் தான் சங்கம் அவர்களுக்கு உதவ முடியும்.

தற்சமயம் அங்கத்தினர்களிடமிருந்து வாங்கிய 22,000 கிலோ கிராமம் புகையிலை இச்சங்கத்தில் தேங்கி உள்ளது. புகையிலையின் விலை சரிந்ததால் இந்த இருப்பை சங்கம் விற்க முடியாமலிருக்கிறது. ஆதலால் வேதாரண்யம் பகுதியில் உற்பத்தியாகும் புகையிலை முழுவதையும் இச்சங்கம் வாங்க இயலாது. ஆனாலும், அச்சங்கம் எத்தனை புகையிலை உற்பத்தியாளரை அதன் அங்கத்தினராக சேர்க்க முடியுமோ அவ்வளவு பேர்களை சேர்க்க முயற்சி செய்து, அவர்களின சரக்குகளை பெருமளவிற்கு விற்பனை செய்வதற்கு ஆவன செய்யும்.

தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. வேதாரண்யத்தில் ஒரு ஒழுங்குமுறை விற்பனை கூடமும் திறக்கப்பட்டுள்ளது. புகையிலை வேதாரண்யம் பகுதியின் முக்கிய விளைபொருளாயிருப்பதால் அதை உற்பத்தி செய்வோர் இந்த ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாணிபம் நடத்துவதற்காக அது வேளாண்மை விளைபொருள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மா. மீனுட்சிசுந்தரம்: தலைவரவர்களே, சென்ற வருஷம் 3 இலட்சம் ரூபாய் மத்திய வங்கி பணம் தந்து, கிட்டத்தட்ட 200 அங்கத்தினர்கள் விவசாயிகளிடமிருந்து புகையிலை கொள்முதல் செய்தது. இந்த அளவிற்குப் பணம் போதவில்லை என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் ''ஓன் பண்ட்ஸ்'' (சொந்தப் பணம்) குறைவாக இருக்கிறது என்று காரணம் சொன்னார்கள். இருந்தாலும் இது புதிய சங்கமாக இருப்பதால் தனியாகக் கவனம் செலுத்தி அதிகப் பணத்தை எப்படியாவது தந்து அந்தப் புகையிலையைக் கொள்முதல் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது புதிய சங்கம் என்ற ஒரே காரணத்திற்காக இருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்த முடியாது.

(ஆ) தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 1978-79-ம் ஆண்டு முதல் பதினோராம் வகுப்பு நீக்கப்படுவது குறித்தும் ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயம் குறித்தும்.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, 41-ஆவது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

'' தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் 1978-79 ஆம் ஆண்டு முதல் பதினோராம் வகுப்பு நீக்கப்படுவதால் பல்லாயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் வேலையிழக்கும், அபாயம் குறித்து ''

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பத்தாண்டுப் பள்ளிப் படிப்பு அடிப்படையிலான புதிய பாடத்திட்டம் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் 1972-73ஆம் ஆண்டு முதலே படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு 1976-77-க்குள் 1 முதல் 10 வகுப்புகளில் அப்பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. தமிழ் நாட்டில் 10—2—3 ஆண்டுப் படிப்பைப் புகுத்தி 1976 நவம்பரில் அரசு ஆணை வெளியிடப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்புக்கு வந்துள்ள மாணவர்கள் தாம் 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு படித்து வெளிவரும் முதல் தொகுதியினராக இருப்பார்கள். அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவார்கள். அவர்கள் 1978-80-ல் இரண்டாண்டு ஹையர் செகண்டரி படிப்பு படிப்பார்கள்.